**இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம்**

**பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு**

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## பாரிய கொழும்பு நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ மேம்படுத்தல் முதலீட்டுச் செயற்றிட்டம் (அகழி 2)
## ஆ.அ. வங்கியின் கடன் இல. 3030 SRI (SF)

### கொழும்பு மாநகரசபை பகுதிக்குள் நிலைமைகளை மதிப்பீடு செய்தல் மற்றும் sewers களின் அவசர திருத்த வேலைகள்

**தொகை A - 89 கிலோ மீற்றர்கள் கொண்ட CCTV உடனான ஈர்ப்பு கழிவு நீர்க் குழாய்கள் மற்றும் தொகை B - 8.2 கிலோ மீற்றர் கொண்ட விசேட உபகரணம் (SD) உடனான அழுத்தக் குழாய்**

**ICB ஒப்பந்த இல. GCWWMIIP-P2/ADB/RQ/DSIDC/ICB-01/2019**

1. பாரிய கொழும்பு நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ மேம்படுத்தல் முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் (அகழி 3) தொடர்பான செலவுகளுக்காக ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து (ADB) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கு அரசாங்கத்திற்கு ஒரு கடனுதவி கிடைக்கப் பெற்றுள்ளதுடன் மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்தத்தின் கீழான தகுதியான கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காக இக் கடனுதவியின் ஒரு பகுதியைப் பிரயோகிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. விலைமனுக் கோரல் ADBஇன் தகுதியுள்ள மூல நாடுகளிலிருந்தான விலைமனுதாரர்களுக்குத் திறக்கப்பட்டுள்ளது.

2. பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு செயலாளர் (இதன் பின்னர் தொழில் வழங்குநர் என அழைக்கப்படும்) சார்பாக அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட பெறுகைக் குழுத் தலைவர் (CAPC) கீழே சுருக்கமாக விபரிக்கப்பட்டுள்ள வேலை வீச்சையுடைய மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்தம் தொடர்பாக தகுதி மற்றும் தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து தற்போது முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

| தொகை இலக்கம் | வேலை வீச்சின் சுருக்கம் | முடிப்பதற்கான காலம் |
|---|---|---|
| தொகை A | கொழும்பு மாநகர பகுதிக்குள் (மாவட்டம் 3, மாவட்டம் 4, மற்றும் மாவட்டம் 5) CCTVஐ உபயோகித்து 89 கிலோ மீற்றர்கள் கொண்ட ஈர்ப்பு கழிவு நீர்க் குழாய்களின் நிலைமையை மதிப்பீடு செய்தல் மற்றும் அவசர திருத்த வேலைகளை மேற்கொள்ளல்<br>● கழிவு நீர்க் குழாய் சுத்திகரித்தல் - 89 கி.மீ.<br>● CCTVஐ உபயோகித்து, '300 முதல் 1500 மி.மீ விட்டம்' கொண்ட சுமார் 89 கிலோமீற்றர் கொண்ட கழிவறை கழிவு நீர்க்குழாய்களின் நிலைமைகளை மதிப்பீடு செய்தல் மற்றும் அவசர திருத்த வேலைகள்<br>● ஏற்கனவேயுள்ள பழுதடைந்த, புதைக்கப்பட்ட கழிவறை கழிவு நீர்க் குழாய்களின் உள்ளக மற்றும் வெளியக திருத்த வேலைகள்<br>● பழுதடைந்த MH மூடிகளைப் பழுது பார்த்தல் மற்றும் மாற்றீடு செய்தல் | 595 நாட்கள் |
| தொகை B | கொழும்பு மாநகர பகுதிக்குள் (மாவட்டம் 2B மாவட்டம் 5) விசேட உபகரணனம் (SD) உபயோகிக்கும் 8.2 கிலோமீற்றர்கள் கொண்ட Force Mains களின் நிலைமை மதிப்பீடு செய்தல் மற்றும் அவசர பழுது பார்த்தல்கள்<br>● சுமார் 8.2 கிலோ மீற்றர் கொண்ட குழாய் விநியோகங்களின் அழுத்தக் குழாய்களின் நிலைமையை மதிப்பீடு செய்தல் மற்றும் அவசர பழுது பார்த்தல்கள்<br>(விசேட உபகரணங்கள் (SD) உபயோகித்து 500 மி. மீ. விட்டம், 600 மி. மீ. விட்டம் மற்றும் 1100 மி. மீ. விட்டம்) | 252 நாட்கள் |
| தொகை A மற்றும் தொகை B | இரண்டுமே மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறாக அமையும். | தொகை A 595 நாட்கள் தொகை B 252 நாட்கள் |

3. ADB இன் ஒற்றை படிநிலை ஒற்றை தபாலுறை விலைமனுக் கோரல் நடைமுறைக்கமைவாக சர்வதேச போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடாத்தப்படும். தகைமை மற்றும் தகுதி தேவைப்பாடுகள் என்பன விலைமனு ஆவணத்தின் 3ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ளவாறாக அமையும்.

4. ஆர்வங் காட்டும் விலைமனுதாரர்களுக்கு விலைமனு ஆவணங்களைப் பெற்றுக் கொள்ள முன்னர் அவற்றைப் பரீட்சித்துப் பார்க்க முடிவதுடன் பந்தி 9 இல் வழங்கப்பட்டுள்ளவாறாக விலைமனு சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி வரையிலான வேலை நாட்களில் 9.00 மணி முதல் 16.00 மணி வரை கொழும்பு 7, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை, இல. 86, பாரிய கொழும்பு நீர் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவ மேம்படுத்தல் முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் அகழி 2, செயற்றிட்டப் பணிப்பாளரின் அலுவலகத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். தொலைபேசி (94) (11) 2665331 மற்றும் தொலைநகல் (94) (11) 2665330 அல்லது மின்னஞ்சல்: pdgcwmp@sltnet.lk

5. PDF உருவகத்திலான விலைமனு ஆவணத்தின் மென் பிரதியொன்று கீழேயுள்ள இணைப்பில் எந்தவொரு ஆர்வங்காட்டும் விலைமனுதாரரினதும் பரீசீலனைக்காக காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இருந்த போதிலும் அவ்வாறான ஆவணம் பரிசீலனைக்கு மாத்திரம் ஏற்புடையதாகும் என்பதுடன் விலைமனு சமர்ப்பிப்பதற்காக செல்லுபடியாகாது.

   https://drive.google.com/drive/folders/1nM8bgyLBkk1UCcFsSP2fGoNqhilQkaMT?usp=sharing

6. பந்தி 4 இலுள்ள முகவரிக்கு ஒரு எழுத்துருவிலான விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டு மற்றும் ஒரு மீளளிக்கப்படாத கட்டணமான ஒரு இலட்சம் இலங்கை ரூபா (இ.ரூ. 100,000) அல்லது ஐநூற்றி அறுபது ஐக்கிய அமெரிக்க டொலர்களைச் (ஐ.அ.டொலர் 560) செலுத்துவதன் மூலம் வேலை நாட்களில் 9.00 மணி மற்றும் 16.00 மணி இடையே ஒரு முழுமைப்படுத்தப்பட்ட விலைமனு ஆவணங்களின் தொகுதியொன்றை விலைமனுதாரர்களால் கொள்வனவு செய்து கொள்ளலாம். கொடுப்பனவுமுறை ரொக்கப்பணத்தில் அல்லது பாரிய கொழும்பு நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ மேம்படுத்தல் முதலீட்டு நிகழ்ச்சித் திட்டப் பெயரில் இலங்கையிலுள்ள பிரசித்தி பெற்ற வங்கியொன்றிடமிருந்து பெறப்பட்ட ஒரு அத்தாட்சிப்படுத்தப்பட்ட காசோலை/ கோரிக்கை வரைவு என்பனவாகும். விலைமனு ஆவணங்களை நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம். அல்லது கொடுப்பனவு தொடர்பான பற்றுச்சீட்டை சமர்ப்பிப்பதன் மூலம் உள்நாட்டிற்குள் இலவசமாக தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். ஒரு வேண்டுதலின் பேரில் கொடுப்பனவினை மேற்கொள்ளப்பட்டமைக்கான ஆவணத்தின் பிரதி தொலைநகல் மூலம் அனுப்பப்பட்டு, தூதஞ்சலுக்கான கட்டணம், விலைமனுதாரரின் நாட்டில் முன்னரே செலுத்தப்படுவதன் மூலம், விலைமனுக்கோரும் ஆவணங்கள் தூதஞ்சல் மூலம் அனுப்பப்படலாம் அவ்வாறான சந்தர்ப்பங்களில் விலைமனு ஆவணம் தொடர்பான இழப்பு அல்லது தாமதத்திற்கு பொறுப்புக்கூறப்பட மாட்டாது.

7. ஒரு தள விஜயம் 2020 ஜுலை 31 அன்று 9.30 மணிக்கு ஆரம்பிக்கப்படுவதுடன் மேலே 4ஆம் பந்தியில் வழங்கப்பட்டுள்ள முகவரியில் அதே தினம் 14.30 மணிக்கு ஒரு முன்னோடி விலைமனு கூட்டம் ஆரம்பமாகும். விலைமனுதாரர்கள் இவ் இரண்டிலுமே கலந்துகொள்ள அறிவுறுத்தப்படுவதுடன், தற்போதைய கொவிட்-19 தொற்றுநோய் நிலைமை காரணமாக, விலைமனுக்கூட்டத்தில் நேரடியாக கலந்துகொள்ள முடியாதுள்ள விலைமனுதாரர்க்கு ஒரு இணைய செயலி (APP) ஊடாக, முன்னோடி விலைமனுக்கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக, இணைய மாநாட்டு வசதி ஒழுங்கு செய்யப்படும்.

8. விலைமனுக்கள் 147 நாட்களைக் கொண்ட காலமொன்றிற்கு செல்லுபடியாக வேண்டியதுடன் விலைமனு பிணையானது விலைமனு சமர்ப்பிப்பு இறுதித் தினத்திலிருந்து (அல்லது எந்தவொரு நீடிப்புச் செய்யப்பட்ட இறுதித் தினத்திலிருந்து) 175 நாட்களைக் கொண்ட காலமொன்றிற்கு செல்லுபடியாதல் வேண்டும்.

9. விலைமனுக்கள் விலைமனு ஆவணத்தில் வழங்கப்பட்டுள்ள உருவகத்தில் தயாரிக்கப்பட்டு 2020 ஓகஸ்ட் 28 அன்று 15.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்பப்படவோ அல்லது இலங்கை கொழும்பு 02, யூனியன் பிளேஸ், இல. 330 பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட பெறுகைக் குழுத் தலைவரிற்கு (பிரதான நிதி அலுவலருக்கு) முகவரியிடப்பட்டு 'விலைமனு பெட்டிக்குச்' சேர்க்கப்படவோ வேண்டும்.

10. தாமதமாகும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் விலைமனுத்திறப்பில் கலந்து கொள்ள முன்வரும் விலைமனுதாரரின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனு சமர்ப்பிப்பு தொடர்பான மேற்படி இறுதி நேரத்தின் பின்னர் உடனடியாக விலைமனுக்கள் திறக்கப்படும்.

11. பொது நிர்வாகம் உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சானது விலைமனுக்களைத் தயாரிப்பது, ஒப்படைப்பது மற்றும் விலைமனுக் கூட்டத்தில் கலந்து கொள்வது தொடர்பில் விலைமனுதாரர்களுக்கு ஏற்படும் எந்தவொரு செலவு அல்லது இழப்பு தொடர்பாகவும் பொறுப்பேற்காது.

**செயலாளர்,**
**பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும்**
**உள்ளூராட்சி அமைச்சு.**